# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - மார்ச் 21, 2026

Weekly E-paper • March 21, 2026




# அறிவாலய அரசியலும், தில்லிக்கான காவடியும்!

சுப. வீரபாண்டியன்

## மெரினாவில் அறிவுப் புரட்சியின் அடையாளம்!

முனைவர்.காந்தி பாபு

## வாழ்ந்து போராடுவோம்

தலையங்கம்

## திமுகழகக் கூட்டணிக்கே வாக்களிப்போம்

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - மார்ச் 21, 2026

Weekly E-paper ● March 21, 2026


## அறிவாலய அரசியலும், தில்லிக்கான காவடியும்!

**சுப. வீரபாண்டியன்**

திமுக, அதிமுக கூட்டணிப் பேச்சு வார்த்தைகள் இன்னும் முழுமையாக முடிவடைந்து விடவில்லை! எனினும், திமுகவிற்கும், முதன்மைக் கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகளுக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது! அதிமுக கூட்டணியிலோ ஒரு தேக்க நிலை தொடர்ந்து நீடிப்பதைப் பார்க்கிறோம்!

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஒரு மாத காலம் இருக்கிறது என்பதால், இப்போது பேச்சு வார்த்தைகள் நடப்பது இயல்பான ஒன்றுதான். இன்னும் ஒரு வாரத்தில் எல்லாம் முடிவுக்கு வந்து விடும் என்பது உறுதி!

பேச்சு வார்த்தைகள், சந்திப்புகள் நடக்கின்றன என்பதைத் தாண்டி, அவை எங்கே நடக்கின்றன என்பதன் மூலமாகவும் அதிகார மையம் எது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்! திமுக கூட்டணிக்கான பேச்சுவார்த்தை தொடக்கத்தில் இருந்து திமுகவின் தலைமை அலுவலகமான அறிவாலயத்தில்தான் நடந்து வருகிறது! ஆனால் அதிமுக தலைமையோ, அடிக்கடி தில்லிக்குப் பறக்க வேண்டி இருக்கிறது!

இப்போது அதிமுகவின் தலைவர் பழனிச்சாமி மட்டுமல்லாமல், அன்புமணி ராமதாஸ், டிடிவி தினகரன் ஆகியோரும் தில்லியில் அமித்ஷாவின் வீட்டுக் கதவு எப்போது திறக்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்!

அந்தக் கூட்டணியை பாஜகதான் முடிவு செய்கிறது என்பதும், இவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணி, தில்லிக்குக் காவடி தூக்குவது மட்டும்தான் என்பதும் தெளிவாகி இருக்கிறது !

கூட்டணிப் பேச்சு வார்த்தைகளையே இங்கு நடத்த இயலாதவர்கள், நாளை ஒருவேளை, தப்பித் தவறி ஆட்சிக்கு வந்தால், தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளை முடிவு செய்யும் அதிகாரத்தை எங்கிருந்து பெறுவார்கள்?

எனவே இது வெறும் தேர்தல் பிரச்சனையாக மட்டும் இல்லாமல், தமிழ்நாட்டின் சுயமரியாதையோடு தொடர்பு கொண்ட சிக்கலாகவும் இருக்கிறது! தமிழ்நாடு எப்போதும் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமானால், மக்கள் திமுகவை ஆதரிப்பதே சரியானது என்பதை, இன்றைக்குப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் இடங்களே தெளிவாகச் சொல்கின்றன!

ஆம், நம் கழகத்தின் தலைவர் சொல்வது போல, இந்தத் தேர்தல் என்பது தமிழ்நாட்டிற்கும், தில்லிக்கும் இடையில் நடைபெறுகிற தேர்தல்தான் !

●

## அகற்றப்பட வேண்டிய அநாகரிகங்கள்!

### பேராசிரியர் சுப.வீரபாண்டியன் கண்டன அறிக்கை

அரசியல் முதிர்ச்சியும், நாகரிகமும் இல்லாமல், பொது மேடைகளில் பேசக்கூடிய ஒரு சிலர் எல்லா கட்சிகளிலும் இருப்பார்கள். அவர்களைத் தலைவர்கள் கண்டிக்க வேண்டும்! ஆனால் சில கட்சிகளில் தலைவர்களே அப்படி இருக்கும் அவலத்தை இப்போது காண நேரிடுகிறது! சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் உறுப்பினர்களாக இருந்தவர்கள், முன்னாள் அமைச்சர்கள் சிலர், அதிமுகவின் மேடைகளில் இப்போது அப்படிப் பேசுகின்றனர்!

உங்கள் கனவுகளைச் சொல்லுங்கள், நிறைவேற்றித் தருகிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கும் சொற்கள், பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன!

குழந்தைகளின் படிப்பு, குடியிருக்க வீடு, அன்றாட வாழ்வின் அவசியத் தேவைகள் போன்றவைகளில் மக்களுக்கு கனவுகள் இருக்கும் ! அவற்றைச் சொல்லுங்கள் என்று முதலமைச்சர் கேட்டிருக்கிறார்! இயன்ற வரையில் நிறைவேற்றித் தருகிறோம் என்று உறுதியும் அளித்திருக்கிறார்!

இதுகுறித்து அதிமுக ஆட்சியில், முன்னாள் அமைச்சராக – அதுவும் சட்ட அமைச்சராக – இருந்த திரு சி.வி. சண்முகம் அவர்கள், மிகவும் கொச்சையாக ஒரு செய்தியை மேடையில் வெளியிட்டு இருக்கிறார்!

ஒரு புகழ் பெற்ற நடிகையின் பெயரைச் சொல்லி, எனக்கு அவர் வேண்டும் என்று ஒரு கனவு இருக்கிறது, நிறைவேற்றித் தருவீர்களா என்று பொது மேடையில் கேட்கிறார்!

தன்னைத்தானே அவர் ஒரு பொது மேடையில் அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதோடு, ஒரு பெண்ணின் பெயரை மேடையில் கூறி அவரையும் இழிவு படுத்தி இருக்கிறார்! அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைப் பற்றி இப்படி வேறு யாராவது பேசி இருந்தால், அவருக்கும் அவர் குடும்பத்தினருக்கும் எவ்வளவு சீற்றம் ஏற்பட்டிருக்கும் ! இவரெல்லாம் எப்படி ஓர் ஆட்சியில் அமைச்சராக இருந்திருக்கிறார் என்பதை நினைத்தால் வேதனையாக இருக்கிறது!

அதே அதிமுகவின் இன்னொரு முன்னாள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், திரு திண்டுக்கல் சீனிவாசன், பெண்களுக்கு சேலை மட்டும் கொடுத்தால் போதுமா, பாவாடை கொடுக்க வேண்டாமா என்று கேட்கிறார். இவர்களின் சிந்தனை எல்லாம் எங்கே மூழ்கிக் கிடக்கிறது என்பதை இவர்களின் உரைகளே எடுத்துக் காட்டுகின்றன!

புதிதாக தொடங்கப்பட்டிருக்கும் தவெக கட்சியில், புதிதாக இணைந்திருக்கும் அதன் தேர்தல் மேலாண்மைச் மேலாளர் திரு ஆதவ் அர்ஜுனா, தேவையில்லாமல் நடிகர் ரஜினிகாந்தை வம்புக்கு இழுத்து, எல்லோரிடமும் வாங்கி கட்டிக் கொண்டிருக்கிறார்! ரஜினிகாந்த் எந்த வம்புக்கும் போவதில்லை, யாரைப் பற்றியும் இழிவாகப் பேசுவதில்லை. அப்படி இருக்கும் அவரைத் தவறாக பேசுவது தங்களுக்குத் தான் அவமானம் என்பதை ஆதவ் உணர வேண்டும்!

தேர்தல் நெருங்க நெருங்க, இப்படிப்பட்ட அநாகரிகங்களும், அத்துமீறல்களும் பொது மேடைகளில் தலை காட்டுவது தமிழகத்தைத் தலை குனிய வைக்கும் !

இப்படிப்பட்ட தரக்குறைவான பேச்சுகளைத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது!

மாண்புமிகு முதல்வரின் வழி நின்று, தமிழ்நாடு தலை குனியாது என்று உரத்துச் சொல்கிறது!

●

# மெரினாவில்
# அறிவுப் புரட்சியின் அடையாளம்!

முனைவர்.காந்தி பாபு

"கற்றனைத் தூறும் அறிவு" - இது வெறும் வள்ளுவன் வரி மட்டுமல்ல, வீழ்ந்து கிடந்த இனத்தை மீட்டெடுத்த திராவிட இயக்கத்தின் தாரக மந்திரம்! இதோ, உலகமே உற்றுநோக்கும் சென்னை மெரினா கடற்கரையில், உழைப்பாளர் சிலைக்கு வலுசேர்க்கும் வகையில், தமிழரின் கல்விப் பெருமையை உலகிற்கு உரக்கச் சொல்லும் 'கற்றனைத் தூறும் அறிவுச் சிலை' கம்பீரமாகத் திறக்கப்பட்டிருக்கிறது.



சிலை சொல்லும் செய்தி: விடுதலையின் வேர் கல்வி! இந்தச் சிலை வெறும் வெண்கல வார்ப்பல்ல, இது தமிழினத்தின் தலைவிதியை மாற்றியெழுதிய திராவிட மாடல் ஆட்சியின் சாட்சியம்.

அடிமைத்தளையை அறுத்து, அறிவெனும் சிறகை விரித்து இளைஞர்களும் மாணவர்களும் வானத்தை வசப்படுத்தத் துடிக்கும் பாய்ச்சல் அச்சிலையின் ஒவ்வொரு அசைவிலும் பிரதிபலிக்கிறது.

ஏழை, எளிய, விளிம்புநிலை மக்கள் என எவருக்கும் எட்டாக்கனியாக இருந்த கல்வி, இன்று அனைவருக்கும் வசப்பட்டிருக்கிறது என்பதைக் குறிக்கும் வகையில், அனைத்துத் தரப்பு மாணவர்களின் உருவங்களும் அங்கு இடம்பெற்றுள்ளன. மாற்றுத்திறனாளி மாணவர் முதல் பெண் கல்வி வரை, "யாவருக்கும் கல்வி" என்ற சமத்துவக் கோட்பாட்டை இச்சிலை காண்போர் மனதில் ஆழமாகப் பதிக்கிறது.

"அறிவே அதிகாரத்தின் திறவுகோல்!" என்பதே இந்தச் சிலையை நிறுவிய நம் முதலமைச்சர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சிந்தனை. "தமிழர்கள் கல்வியை இறுகப்பற்றிக் கொண்டால் போதும், ஒருபோதும் நாம் வீழ மாட்டோம்!" என்ற முதலமைச்சரின் முழக்கம், திராவிட இயக்கத்தின் நூற்றாண்டுக் காலப் போராட்டத்தின் சாரம்.

அன்று தந்தை பெரியார் சொன்ன "அறிவு தான் மனிதனை மனிதனாக்கும்" என்ற தத்துவத்தை, இன்று நடைமுறைச் செயல்பாடாக மாற்றி, "புதுமைப் பெண்" "இல்லம் தேடிக் கல்வி" "தமிழ்ப்புதல்வன் " "நான் முதல்வன்" "உங்கள் கையில் உலகம்" உள்ளிட்ட எண்ணற்றத் திட்டங்களின் மூலம் தமிழகத்தைக் கல்விப் புரட்சியில் முதன்மை மாநிலமாக மாற்றிய பெருமை திராவிட மாடல் அரசையே சாரும்.

மெரினாவிற்கு வரும் மக்கள் இனி வெறும் அலைகளை மட்டும் பார்த்துச் செல்ல மாட்டார்கள்.

தமிழினத்தின் அறிவு வலிமையைப் பறைசாற்றும் இந்தச் சிலையைக் கண்டு, "கல்விதான் எங்களைக் காக்கும் கேடயம்" என்ற உறுதியோடு திரும்புவார்கள்.

புத்தகங்களை ஏந்திக் கொண்டு புதிய உலகத்தைப் படைக்கும் வலிமை இளைஞர்களின் கைகளில் இருக்கிறது.

அறிவால் இணைவோம்,

அன்பால் வெல்வோம்!

வெல்வோம் ஒன்றாக!

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## வாழ்ந்து போராடுவோம்

ஈழவிடுதலைப்போராட்டத்தில்முதல்களப்பலியானவர் (1974) பொன்.சிவகுமரன். தமிழ்நாட்டில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் இறுதியாகக் களப்பலி ஆகியிருக்கிறார், மே 17 இயக்கத் தோழர் சிவகுமார் என்ற சிவா திலீபன்.

இலக்கணச் செழுமையோ, இலக்கிய வளமையோ இல்லாத, கடிபோலி வடிவத்தில் இருக்கும் இந்தியின் மூலம், உலகின் மூத்த, முதிர்ந்த மொழியான தமிழ்மொழியை அழிக்க முயலும் ஒன்றிய பாஜக அரசு அடுத்த இந்தி எதிர்ப்புப் போருக்குத் தமிழ்நாட்டைத் தயார் செய்கிறது என்று தோன்றுகிறது.

இரயில் நிலையங்களில், வங்கிகளில், அஞ்சல்துறையில் இந்தியைத் திணிக்கும் ஒன்றியம் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூட இந்தியில் மட்டுமே கடிதம் எழுதுகிறது காவி ஒன்றிய அரசு.

சரியாகச் சொல்வதானால் இந்தி மொழிக்கும் எதிரி பாஜக ஒன்றிய அரசுதான். எதிர்காலத்தில் இந்தியை ஒழித்துவிட்டு, கேட்பாரற்றுக் கிடக்கும் சமஸ்கிருதத்தை ஆட்சியில் வைப்பார்கள். அப்போது இந்தி பேசும் மக்களும், அவர்கள் மொழியை இழப்பார்கள். மொழியழிப்பும், இன அழிப்பும் ஒன்றுதான்.

அழிவுசக்தியாகப் பார்க்கப்படும் ஆர்எஸ்எஸ், அதன், தொங்குசதையான பாஜக இரண்டையும் மக்கள் விரோத சக்திகளாகவே மக்கள் பார்க்கிறார்கள்.

1938-1965ஆண்டுகளின்இந்திஎதிர்ப்புப்போராட்டத்தைக் கண்முன் கொண்டு வருகிறார், தோழர் சிவா திலீபன். இந்தி ஆதிக்கத்திற்கு எதிராக இரயில் நிலையங்களில், குறிப்பாக பூங்கா இரயில் நிலையத்தில் 11-03-2026 அன்று இந்திப் பெயர் எழுத்துகளை அழித்தபோது, "இந்தி ஒழிக, தமிழ் வாழ்க" என்று சொல்லிக் கொண்டு அப்போது வந்த இரயில் முன்பாய்ந்த தோழர் சிவா திலீபன், 18-03-2026 அன்று வீரமணம் அடைந்துவிட்டார்.




போராடாமல் உரிமையைப் பெறமுடியாது. அப்படிப் போராடுவதற்கு நாம் உயிரோடு இருக்க வேண்டும். தோழர் சிவா திலீபன் உயிரிழப்பே கடைசியாக இருக்கட்டும். அவருக்குக் கனத்த இதயத்துடன், நம் வீரவணக்கம்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்:
**வெற்றிச்செல்வன்**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை- 600 024,**
தொலைபேசி: 044-2472 6408

# திமுகழகக் கூட்டணிக்கே வாக்களிப்போம்

## வழக்கறிஞர் இராம. வைரமுத்து

எதிர்வரும் ஏப்ரல் 23 ஆம் நாள் தமிழ்நாட்டின் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இத்தேர்தலில் தி.மு.க தலைமையிலான கூட்டணி, அ.தி.மு.க - பாஜக அடங்கியுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி, த.வெ.க, நாம் தமிழர் ஆகிய நான்கு அணிகள், மருத்துவர் ராமதாஸ் தலைமையிலான பா.ம.க, சசிகலாவின் அ.இ.பு.த.ம.மு.க என பலமுனைப் போட்டி நிலவுகிறது.

ஒரு தனி மனிதனுக்கு மட்டுமின்றி, இனத்திற்கும், மொழிக்கும், மாநிலத்திற்கும் சுயமரியாதை என்பது இருக்கிறது. அந்த வகையில் இனம், மொழி, மண் மானம் காக்கும் அணியாக தி.மு.க தலைமையிலான கூட்டணி பணியாற்றி வருகிறது. தமிழ்நாடு தலைகுனியாது என்கிற சுயமரியாதை உணர்வோடு "ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்" என்ற முழக்கத்தை தி.மு.க கூட்டணி முன் வைக்கிறது.

தி.மு.க கூட்டணியில் இடம் பெற்றிருக்கிற கட்சிகளும் சுயநல நோக்கம் எதுவும் இன்றி தமிழ்நாட்டின் நலன் என்கிற பொது நோக்கத்தோடு ஓரணியில் திரண்டு இருக்கிறது. அதற்கேற்ப அக்கட்சிகளுக்கிடையே தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையும் வெளிப்படைத் தன்மையோடு நடைபெற்று வருகிறது. கட்சிகள் போட்டியிடும் தொகுதிகளின் எண்ணிக்கை சற்று முன்பின் இருந்தாலும் எண்ணத்தால் ஒன்றுபட்டு நிற்கிறது இந்த கூட்டணி.

ஆட்சி, அதிகாரம் என்கிற குறுகிய நோக்கம் மட்டுமே இல்லாமல் மக்கள் நலனை முன்னிறுத்தி தி.மு.க தனது கூட்டணியை கட்டமைத்திருப்பதால் தான் இந்த கூட்டணி 2019 நாடாளுமன்றத் தேர்தலில் தொடங்கி தற்போது வரை உடையாமல் உறுதியாக நிற்கிறது. அத்துடன் புதிய கட்சிகளும் இந்த கூட்டணியில் இணைந்துள்ளதால் இக் கூட்டணி தற்போது மேலும் வலுவடைந்துள்ளது. 2026 சட்டமன்றத் தேர்தலில் எப்படி ஆயினும் திமுக கூட்டணியில் இருந்து காங்கிரசை பிரித்து விட வேண்டும் என்று காங்கிரஸுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து சிலர் தீட்டிய சதித்திட்டம் தோல்வியில் முடிந்தது அனைவரும் அறிந்ததே.

கூட்டணிக் கட்சிகளிடையே பல கட்டங்களாக தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை, போட்டியிட விண்ணப்பித்துள்ள கட்சியினருக்கு நேர்காணல், தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினர் மேற்கொள்ளும் தீவிர ஆலோசனை என முழு வீச்சில் தி.மு.க தேர்தல் பணிகளை மேற்கொண்டு வருகிறது. எதிர்புறத்தில் உள்ள தேசிய ஜனநாயக கூட்டணியில் இப்போது வரை தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை எதுவும் வெளிப்படையாக நடைபெறவில்லை. இப்படியே நாட்களை கடத்தி விட்டு கடைசி நேரத்தில் அ.தி.மு.க.வை மிரட்டி அதிகமான தொகுதிகளை பெற்றுவிட பா.ஜ.க திட்டமிட்டு இருப்பதாக தெரிகிறது.

அதேபோல் த.வெ.கவின் இரண்டாம் நிலை தலைவர்களில் ஒருவரான ஆதவ் அர்ஜுனா 90 தொகுதிகள் மற்றும் இரண்டரை ஆண்டுகளுக்கு விஜய் முதலமைச்சர் என்று உறுதியளித்து தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையுமாறு த.வெ.கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும், அதை தாங்கள் நிராகரித்து விட்டதாகவும் அண்மையில் கூறினார். அவ்வாறான பேச்சுவார்த்தை எங்கே, எப்போது நடைபெற்றது என்ற விவரங்களை அவர் வெளியிடவில்லை. இதன் மூலம் இவர்களது கூட்டணி பேரங்கள் அனைத்தும் திரைமறைவிலேயே நிகழ்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

நெஞ்சில் நேர்மையுடன் மக்கள் மத்தியில் வெளிப்படைத்தன்மையுடன்கூட்டணிபேச்சுவார்த்தையை தி.மு.க மட்டுமே நடத்துகிறது. தி.மு.க கூட்டணி பேச்சுவார்த்தைகளில் தமிழ்நாட்டின் உரிமைகளும், தமிழரின் நலன்களும் மட்டுமே விவாதிக்கப்படுகிறதே தவிர தனிப்பட்ட ஆதாயங்கள் அல்ல. ஆகவே தி.மு.க கூட்டணிக்கு வாக்களித்து திரும்பவும் திராவிட மாடல் ஆட்சியை மலரச் செய்வது தமிழ்நாட்டு மக்கள் அனைவரின் கடமையாகும்.

களம் அழைக்கிறது!

கடமை ஆற்றுவோம் !!

●

## பொறுப்பாளர்கள் நியமனம்

திருச்சி, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களில் கீழ்கண்டவாறு பேரவைத் தோழர்கள் பொறுப்பாளர்களாக நியமிக்கப் படுகிறார்கள்.

**திருச்சி மாவட்டம்**

1.மாவட்ட துணைச் செயலாளர்
**ப.ஆ.பீட்டர்**

2.மாவட்டத் துணைத் தலைவர்
**இல.மகேந்திரன்**

3.மாவட்ட பொருளாளர்
**ந.ரங்கராஜ்**

பகுதி செயலாளர்கள்

**1.அண்ணாநகர் பகுதி**
**கி.கணேசன்**

2.விளார் பகுதி
**நா.மாரியப்பன்**

3.நாஞ்சிக்கோட்டை
**தங்க.வெற்றி வேந்தன்**

4.மருத்துவ கல்லூரி
**பேரா.ப.திருநாவுக்கரசு**

**தஞ்சாவூர் மாவட்டம்**

1.மாவட்டத் தலைவர்
**இரா.காசிநாதன்**

2.மாவட்ட செயலாளர்
**மு.ரெங்கசாமி**

3.மாநகர செயலாளர்
**மு.செந்தில்குமார்**

**சேலம் மாவட்டம்**

1.மாவட்ட அமைப்பாளர்
**ரவிக்குமார்**

2.மாநகர அமைப்பாளர்
**சேரலாதன்**

**-சிற்பி செல்வராசு**
(பொதுச்செயலாளர்

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian